# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டுதல்கள் - அரையாண்டு II 2019/2020

## கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

- அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் நிகழ்நிலைத் தளத்தினூடாக (online) பரீட்சைக்கு அமரலாம் அல்லது கலைப் பீடத்திற்கு வருகை தந்து பரீட்சை எழுதற்கூடிய வசதிகளைப் பயன்படுத்தலாம்.

- நிகழ்நிலைத் தளத்தில் (online) அல்லது கலைப் பீடத்திற்கு வருகை தந்து பரீட்சைகளுக்கு அமரும் அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் தங்களது விடைத் தாள்களினை சமர்பிப்பதற்கு மேலதிக நேரம் வழங்கப்படும் அல்லது தங்களது விடைத் தாள்களினை துணைப் பதிவாளர், கலைப் பீடத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும்.

  மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்கள் விடைத் தாள்களினை பரீட்சைகளில் இருந்து தொடர்ந்து வரும் புதன்கிழமைக்குள் (அடுத்த வாரம்) சமர்ப்பிக்க / பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு 15 மாசி மாதம் (February) 2021 முதல் 19 மாசி மாதம் (February) 2021 வரை பரீட்சைகள் நடைபெற்றால், அந்த வாரத்தில் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விடைத் தாள்களும் 2021 மாசி மாதம் (February) 24 ஆம் தேதிக்குள் துணைப் பதிவாளர், கலைப் பீடத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் / பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

- மாணவரொருவர் கலைப் பீடத்திற்கு வருகை தந்து பரீட்சை எழுத விரும்பினால், அவர்களது கோரிக்கையை தெரிவிக்க வார நாட்களில் வேலை நேரங்களில் (காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை) 0112580835 என்ற CEDREP அலுவலக தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். மாணவர்கள் பரீட்சையின் போது அவர்களுக்குத் தேவையான உதவிகளை (வாசிக்கும் கருவி/ எழுதும் கருவி/ தொழில்நுட்ப உதவி) குறிப்பிட வேண்டும். விடுதி வசதிகள் தேவைப்படும் மாணவர்களுக்கு விடுதி மற்றும் விடுதி முதல் கலைப் பீடம் மற்றும் மீண்டும் விடுதிக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதி வழங்கப்படும்.

- மாணவரொருவர் வீட்டிலிருந்து பரீட்சை எழுத விரும்பினால், அவர்கள் தங்கள் விடைத் தாள்களினை கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது பாடநெறியின் குறியீடு மற்றும் சுட்டெண்ணினை மின்னஞ்சலின் தலைப்புப் பிரிவில் (subject section) குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்யலாம்.

| | |
|---|---|
| முதலாம் வருடம் | exam1@arts.cmb.ac.lk |
| இரண்டாம் வருடம் | exam2@arts.cmb.ac.lk |
| மூன்றாம் வருடம் | exam3@arts.cmb.ac.lk |
| நான்காம் வருடம் | exam4@arts.cmb.ac.lk |

**அல்லது** மாணவர்கள் **தங்களது விடைத் தாள்களின் நகலினை தங்களிடம் வைத்துக்கொண்டு (make a copy of their answer script to keep with them) அசல் விடைத் தாள்களினை பதிவுத் தபால் மூலம் (post the original answer script by registered post) பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு** கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

துணைப் பதிவாளர்,
கலைப் பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
கொழும்பு 3

- மாணவரொருவர் தங்கள் பதில்களை எழுத பார்வை அற்றவர்கள் பயன்படுத்தும் தட்டச்சு (braille writer) அல்லது கற்பலகை (slate) பயன்படுத்துகிறார்களானால், **அவர்கள் தங்கள் பதில்களை நகலெடுக்கவும், அவற்றுடன் ஒரு நகலை வைத்திருக்கவும், மேலே உள்ள முகவரிக்கு ஒரு நகலை பதிவுத் தபால் மூலம் அனுப்ப அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

- மாணவர்கள் அஞ்சல் செய்யும் போது தங்கள் பாடக் குறியீடுகளை (உதாரணமாக, FND1201) என கடித உறைகளின் மேல்-இடது புறத்தில் எழுத வேண்டும்.

- **ஒவ்வொரு பாடத்திற்குமான விடைத் தாள்கள் தனித்தனி கடித உறைகளைப் பயன்படுத்தி பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.**

- அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் LMS இல் அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவிப்பு படிவம் (declaration form)/ பொதுவான முதல் பக்கத்தை பூர்த்தி செய்து, அதனை திட்டமிடப்பட்ட பரீட்சை இடம்பெறும் நாளின் முதல் 24 மணி நேரத்திற்குள் குறிப்பிட்ட LMS பாடநெறிப் பக்கங்களில் தங்கள் இருப்பை உறுதி செய்ய சமர்ப்பிக்க வேண்டும். தொழில்நுட்ப சிக்கல்கள் இருந்தால், மாணவர்கள் அறிவிப்பு படிவம் (declaration form)/ பொதுவான முதல் பக்கத்தை மேலே கொடுக்கப்பட்ட பொருத்தமான மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

******